தகவல் தொட்பாடல் தொழில்நுட்பம்
தரம் -07
திரு.செ.சன்ஜித்

(1). பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக

1. உள்ளீட்டுக்கருவியாகக் கொள்ளக்கூடியது பின்வருவனவற்றுள் எது?
   1. அச்சுப்பொறி 2. வன்வட்டு 3. தாய்ப்பலகை 4. தொடுதிரை
2. கட்டுப்பட்டலகினுடைய பயன்பாட்டினை மிகச்சரியாக குறிப்பது?
   1. கணித மற்றும் தர்க்கச் செயற்பாடுகளை மேற்கொள்கிறது
   2. அறிவுறுத்தல்களைப் பெற்று அவற்றைக் குறிநீக்கம் செய்து அவற்றை நிறைவேற்றுகிறது.
   3. அறிவுறுத்தல்கள் மற்றும் இடைநிலை வருவிளைவு போன்றவற்றைச் சேமித்து வைத்தலாகும்.
   4. மேற்கூறிய யாவும்.
3. முதலாம் தலைமுறைக்கணினியில் பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்பம்?
   1. நுண்முறை வழியாக்கி 2. திரான்சிஸ்டர்
   3. வெற்றிடக்குழாய் 4. ஒருங்கிணைந்த சுற்று
4. கணினி வன்பொருள்களையும் மென்பொருள்களையும் முகாமைத்துவம் செய்து கணினி நிரல்களுக்குப் பொதுவான சேவைகளை வழங்கி மற்றும் கணினி பாவனையாளர்களுக்கு வசதியான இடைமுகத்தை வழங்குவது பின்வருவனவற்றுள் எது?
   1. தாய்ப்பலகை 2. நுண்முறை வழியாக்கி 3. இயங்கு முறைமை 4. விசைப்பலகை
5. கணிணியில் கோப்புறையின் மிகச்சரியான பயன்பாடு பின்வருவனவற்றுள் எது?
   1. கணினியினை நச்சு நிரல்களிலிருந்து பாதுகாத்தல்
   2. கோப்புக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கு
   3. கணினி மென்பொருள்களை சேமித்துக் கொள்வதற்கு
   4. கணினி வன்பொருள்களை சேமித்துக் கொள்வதற்கு
6. கணினிக்கு தொடர்ச்சியாக மின்வழங்கலை உறுதிப்படுத்தும் சாதனம்
   1. CPU 2. UPS 3. மின்வழங்கல் வடம் 4. Transformer
7. கணினிச் சாதனங்களுக்குப் பௌதிகச் சேதம் ஏற்படக்கூடிய சந்தர்ப்பமாகக் கொள்ள முடியாதது?
   1. மேசை ஓரங்களில் கணினிச் சாதனங்களை வைத்தல்.
   2. ஒரே மின்செருகியூடாகப் பல கணினிகளுக்கு மின்சாரம் வழங்கல்
   3. இடி, மின்னல் இருக்கும் சந்தர்ப்பங்களில் கணினியை உபயோகித்தல்.
   4. நச்சுநிரல் தாக்கம்
8. முறையான தட்டெழுத்திடலின் நன்மையாகக் கொள்ளக்கூடியது?
   1. அதிக வேகம் 2. குறைவான ஆரோக்கியப் பாதிப்புக்கள்
   3. வேலை வாய்ப்புகள் 4. கணிணித்துறையில் பூரண அறிவு
9. இணையத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் நன்மையல்லாதது பின்வருவனவற்றுள் எது?
   1. ஒரு விடயத்திற்கு அதிக தகவல்கள் கிடைத்தல் 2. வாசிப்புத்திறன் வளர்ச்சியடைதல்
   3. தேடல் திறன் விருத்தியடைதல் 4. பல்தரப்பட்ட நட்பினை மாணவர் பெறுதல்
10. காணொளிகளை பார்வையிட சுலபமான இணையத்தளம் எது?
    1. Google.com 2. Youtube.com 3. Yahoomail.com 4. nie.lk

www.ikeou.lk


LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk
மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்
zoom
ICT
Maths
English
Commerce
Tamil
History
Science
Sinhala
இன்னும் பல
தரம்
01-A/L
Medium
தமிழ்/ English
76667-4945
தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன
www.learneasy.lk || www.lkedu.lk

(10 × 3 = 30 புள்ளிகள்)

(2). தொடர்பு படுத்துக

1. திரான்சிஸ்ரர்	a. எதிர் நச்சுசிரல் மென்பொருள்
2. 1 Byte	b. ஒரு வகை இயக்க முறைமை
3. Kaspersky	c. இரண்டாம் தலைமுறை கணினி
4. Windows	d. கட்டுப்பாட்டு அமைப்பு
5. மீள்செயல்	e. ஒரு எழுத்துருவின் அளவு

(5 × 2 = 10 புள்ளிகள்)

(3). கீழே தரப்பட்டுள்ள சொற்களை கொண்டு கோடிட்ட இடங்களை நிரப்புக

(வலை மேலோடி, மடிக்கணினி, SKYPE, Intel, மூன்றாம் தலைமுறை, சேமிப்புக்கருவிகள், வெளிவாரி கருவிகள், மின்னஞ்சல், நினைவக அலகு, இணையம்)

1. …… பிரதான செயற்பாடு தரவு, அறிவுறுத்தல்கள் மற்றும் இடைநிலை வருவிளைவு போன்றவற்றைச் சேமித்து வைத்தலாகும்.
2. …… கணினிகள் 1965 தொடக்கம் 1975 வரை பயன்படுத்தப்பட்ட கணினிகளாகும்
3. …… தரவுக் கோப்புகளையும் பொருள்களையும் சேமித்தல், கொண்டு செல்லல், மீளப்பெறுதல் போன்ற செயல்களுக்காகப் பயன்படுத்தப்படும்
4. …… என்பது உலகளாவிய ரீதியில் உள்ள கணினி வலையமைப்புகளின் ஒரு வலையமைப்பாகும்.
5. …… எதிர் நச்சுநிரல் மூலம் வருடாமல் அவற்றைப் பயன்படுத்தக் கூடாது
6. …… என்பது பயனரொருவருக்கு வலைப் பக்கங்களை வழியறிந்து அணுகி காட்சிப்படுத்துவதற்கு வசதியளிக்கும் ஒரு மென்பொருளாகும்.
7. …… லின் பிரதான நன்மையாக குறைந்த செலவில் அதிக வேகத்தில் கடிதங்களை அனுப்புதலை குறிப்பிடலாம்.
8. …… கொண்டு செல்லத்தக்க கணினி வகையாகும்.
9. …… சிறந்த காணொளி அழைப்புக்களை வழங்கும் ஒரு வகை மென்பொருளாகும்.
10. …… வேகமான மற்றும் தரமான நுண்செயலியை தயாரிக்கும் நிறுவனமாகும்.

(10 × 2 = 20 புள்ளிகள்)

பகுதி –II

சகல வினாக்களுக்கும் விடை தருக

www.lkedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

1. தற்போதைய கணினிகளின் சிறப்பியல்புகள் 2 தருக?
2. கணினியை நீர் உமது வாழ்வில் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் 2 தருக?
3. கணினியறையில் நீர் அறிந்திருக்க வேண்டிய பாதுகாப்பு விதிகள் 2 தருக?
4. கோப்பு ஒன்றை எவ்வாறு பிரதி செய்து கொள்வீர் என்பதை படிமுறைகளாக தருக?
5. கணினி ஆய்வுகூடத்தை பயன்படுத்திய பின் உறுதி செய்து கொள்ள விடயங்கள் 2 தருக?
6. பயனர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற சட்ட விரோத மென்பொருள் செயல்கள் 2 தருக?
7. கணினி நச்சு நிரல் தாக்கத்திற்குட்படக் கூடிய வழிகள் 2 தருக?
8. நச்சுநிரல் மற்றும் ஏனைய சட்ட விரோதச் செயல்களிலிருந்து கணினியைப் பாதுகாக்கக்கூடிய வழிமுறைகள் 2 தருக?
9. வங்கியில் கணினியின் பயன்பாடு 2 தருக?
10. கணினி மென்பொருட்களை பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் 2 தருக?

(10 × 4 =40 புள்ளிகள்)

www.lkedu.lk